6. அறிக்கை அளித்தல்

மனுக்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அறிக்கை அளித்தல். மனுக்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல், திரு. எஸ். ஜெயக்குமார். மனுக்கள் குழுவின் தலைவர்.

திரு. எஸ். ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 1994-95-ஆம் ஆண்டிற்கான மனுக்கள் குழுவின் 37,38 மற்றும் 39 வரையிலான அறிக்கைகளைப் பேரவைக்கு அளிப்பதில் பெருமை கொள்கிறேன்.

7. மானியக் கோரிக்கைகள், 1995-96, விவாதமும் வாக்கெடுப்பும்-தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 20-வேளாண்மை

(ஆ) கோரிக்கை எண் 52-வேளாண்மை குறித்த மூலதனச் செலவு

(இ) கோரிக்கை எண் 10-பால்வழங்கு திட்டங்கள்

(ஈ) கோரிக்கை எண் 22- கால்நடை வளர்ப்பு

(அ) கோரிக்கை எண் 20 - வேளாண்மை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1995-96-ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்-விவாதமும் வாக்கெடுப்பும். கோரிக்கை எண் 20 – வேளாண்மை. மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“வேளாண்மை பற்றிய 20-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 753,48,84,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்” எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 2463. திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“கூட்டுறவுச் சங்கக் கடன் பெற்றவர்களுக்கு பூச்சி மருந்துடன் பூசானக்